**ஆகஸ்ட் – 26**

# TNPSC துளிகள்

- மத்திய அரசால் 2026 ஆம் ஆண்டிற்கான தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த தென்காசியின் எம். தங்கராஜ் மற்றும் மதுரை கேந்திரிய வித்யாலயா எண் 2-இன் தலைமையாசிரியை ஜெ. அமுதா ஆகிய இரண்டு ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
  - தங்கராஜ் பள்ளி உள்கட்டமைப்பை மேம்படுத்தி, செயல்பாடு சார்ந்த கற்றலை அறிமுகப் படுத்தினார்; அதேவேளையில் அமுதா கேந்திரிய வித்யாலயா சங்கதனில் (KVS) தனது பணியின் போது கல்வி மற்றும் தேசிய மாணவர் படை (NCC) செயல்பாடுகளை ஊக்குவித்துள்ளார்.
- இந்திய ராணுவத்தின் பிராந்திய ராணுவம் (TA), சைபர்பீஸ் (CyberPeace) அமைப்புடன் இணைந்து, உள்நாட்டு இணையப் பாதுகாப்புத் தீர்வுகளை உருவாக்குவதற்கும், இந்தியாவின் இணையப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் தேசிய அளவிலான பாதுகாப்பு ஹேக்கத்தானான டெரியர் சைபர் குவெஸ்ட்டின் 3வது பதிப்பை (TCQ 3.0) தொடங்கியுள்ளது.
- கலிபோர்னியாவில் நடைபெற்ற சிறப்புத் தேர்தலில் ஆயிஷா வஹாப் வெற்றி பெற்று, அமெரிக்க (US) காங்கிரஸுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஆப்கானிய-அமெரிக்கர் ஆனார்.
- 1946 ஆம் ஆண்டில் முஹம்மது அலி ஜின்னாவை பரிசோதித்ததில் மும்பையைச் சேர்ந்த பார்சி மருத்துவர்களான டாக்டர் ஜல் ரத்தன்ஜி படேல் (பொதுநல மருத்துவர்) மற்றும் டாக்டர் ஜல் தபோ-கூ (கதிரியக்க நிபுணர்) ஆகியோரின் பங்களிப்பிற்காக, பாகிஸ்தானின் உயரிய சிவிலியன் விருதான நிஷான்-இ-இம்தியாஸ் விருதுக்கு பாகிஸ்தான் அவர்களைப் பரிந்துரைத்துள்ளது.
- முதியோர்களின் பங்களிப்பை அங்கீகரிப்பதற்கும், அவர்களின் கண்ணியம், நல்வாழ்வு மற்றும் உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் வேண்டி ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 21 அன்று உலக மூத்த குடிமக்கள் தினம் அனுசரிக்கப் படுகிறது.
- மதம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையில் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூரவும், அவர்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், சகிப்புத்தன்மை, பல்சமய உரையாடல் மற்றும் அமைதியான சகவாழ்வை மேம்படுத்த மதம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையிலான வன்முறை செயல்களால் பாதிக்கப் பட்டவர்களை நினைவு கூரும் சர்வதேச தினம் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 22 அன்று அனுசரிக்கப் படுகிறது.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## இடைத்தேர்தல் தடை - சென்னை உயர்நீதிமன்றம்


- தமிழ்நாட்டின் ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் வழக்குகள் முடிவடையும் வரை அங்கு இடைத்தேர்தல் நடத்தப்பட மாட்டாது என இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.
- திருச்சி கிழக்கு, பெருந்துறை, அம்பாசமுத்திரம், விராலிமலை மற்றும் கரூர் ஆகியவையே அந்தத் தொகுதிகளாகும்.
- இந்த ஐந்து தொகுதிகளிலும் தேர்தல் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அதில்

மனுதாரர்கள் தங்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களாக அறிவிக்கவும் கோரி உள்ளனர்.

- 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 84 மற்றும் பிரிவு 151-A ஆகியவற்றுடன் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளையும் இந்தியத் தேர்தல் ஆணையம் மேற்கோள் காட்டியுள்ளது.
- இடைத்தேர்தல் குறித்த அறிவிப்பை வெளியிட இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு விதிக்கப் பட்டிருந்த இடைக்காலத் தடையை 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 8 வரை சென்னை உயர் நீதிமன்றம் நீட்டித்துள்ளது.
- 2026 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலைத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்கள் ராஜினாமா செய்ததால் இந்த ஐந்து இடங்களும் காலியாகின.




## தமிழ்நாடு சட்டமன்ற முன்னறிவிப்பு விதி




- தமிழ்நாடு சட்டமன்ற விதி 55 மற்றும் விதி 56-இன் கீழ் சமர்ப்பிக்கப்படும் முன்னறிவிப்புகள் ஏற்கப்படுவதற்கு முன்பு, அவற்றை உறுப்பினர்களும் ஊடகங்களும் வெளியிடுவதற்கு சட்டமன்ற சபாநாயகர் தடை விதித்துள்ளார்.

- விதி 55 என்பது விவாதத்திற்காக எழுப்பப்படும் பிரச்சினைகளைக் கையாள்கிறது. அதேவேளையில் விதி 56 ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் குறிக்கிறது.
- உறுப்பினர்கள் ஒப்புதல் பெறுவதற்கு முன்னதாகவே இத்தகைய முன்னறிவிப்புகளை ஊடகங்களுடனும் சமூக ஊடகங்களிலும் பகிர்வதாக சபாநாயகர் தெரிவித்தார்.
- விதி 36(5)-இன் படி, ஒரு முன்னறிவிப்பானது சபாநாயகரால் ஏற்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கையாக அனுப்பப்படும் வரை அதனை வெளியிடக் கூடாது.
- ஊடகங்களும் இத்தகைய முன்னறிவிப்புகள் ஒப்புதல் பெறுவதற்கு முன்பு அவற்றை வெளியிட வேண்டாம் என சபாநாயகர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## அன்னபூரணி சூப்பர் சிக்ஸ் LPG திட்டம்




- தமிழ்நாடு அரசானது அன்னபூரணி சூப்பர் சிக்ஸ் திட்டத்தை 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 அன்று மாநில சட்டமன்றத்தில் அறிவித்ததோடு இத்திட்டம் 2027 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பொங்கல் திருநாளன்று தொடங்கப்பட உள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், தகுதியான குடும்பங்களுக்கு வீட்டு உபயோக திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய எரிவாயு (LPG) சிலிண்டர்களுக்கான தொகை திருப்பி வழங்கப் படுவதுடன் இத்தொகை நேரடிப் பலன் பரிமாற்றம் (DBT) மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக மாற்றப்படும்.
- ஆண்டு வருமானம் ₹2.5 லட்சத்திற்கும் குறைவாக உள்ள குடும்பங்கள், நடுத்தர மற்றும் குறு விவசாயிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட குடும்பங்கள் இதற்குத் தகுதியானவர்கள்.
- இத்திட்டத்திற்கு ஆண்டுக்கு ₹4,000 கோடி நிதியொதுக்கீடு தேவைப்படும் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- இது தமிழ்நாட்டின் பொது விநியோக மற்றும் நலத் திட்டக் கட்டமைப்புடன் இணைக்கப் பட்டுள்ளதுடன் குடும்பங்களின் சமையல் எரிபொருள் செலவுகளைக் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தமிழ்நாட்டில் இலவச பேருந்துப் பயணத் திட்ட விரிவாக்கம்

- 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 2 (காந்தி ஜெயந்தி) முதல் பல வகையான பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பேருந்துப் பயணத்தை வழங்குவதற்காக 'வெற்றிப் பயணம்' திட்டத்தை விரிவுபடுத்துவதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- விரிவாக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் விரைவுப் பேருந்துகள், குறைந்த நிறுத்தங்களைக் கொண்ட பேருந்துகள் (LSS), டீலக்ஸ்/உயர்தரப் பேருந்து மற்றும் புறநகர் பேருந்துகளிலும் பெண்கள் இலவசமாகப் பயணம் செய்யலாம்.
- முன்னதாக, நகரங்கள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் இயக்கப்படும் சாதாரணப் பேருந்துகளிலும், 40 கி.மீ வரையிலான மலைப்பாதை வழித்தடங்களிலும் மட்டுமே பெரும்பாலும் இலவசப் பயணம் கிடைத்தது.
- இதற்கு வருமான வரம்போ அல்லது வேறு கட்டுப்பாடுகளோ இல்லை என்பதோடு மேலும், திருநங்கைகளும் இத்திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- இந்த விரிவாக்கத் திட்டத்தினால் தமிழ்நாடு அரசுக்கு ஆண்டுக்கு சுமார் ₹6,000 கோடி செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.




# தேசியச் செய்திகள்

## தேசிய தொழில்முனைவோர் பிரச்சாரம்-II

- ஊரகப் பெண்களிடையே தொழில்முனைவை ஊக்குவிக்கும் நோக்கில், ஊரக வளர்ச்சி அமைச்சகமானது தீன்தயாள் அந்தியோதயா யோஜனா-தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் (DAY-NRLM) கீழ் தேசிய தொழில்முனைவோர் பிரச்சாரம்-II-ஐத் தொடங்கியது.
- விவசாயம் மற்றும் விவசாயம் சாராத துறைகளில் பெண்கள் தலைமையிலான தொழில் நிறுவனங்களை மையமாகக் கொண்ட இந்த மூன்று மாத காலப் பிரச்சாரம் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 முதல் நவம்பர் 21 வரை நடைபெற உள்ளது.
- இது 5 லட்சம் சுயஉதவிக் குழு (SHG) பெண்களுக்குப் பயிற்சி அளித்தல், 50,000 ஊரகத் தொழில் நிறுவனங்களை முறைப்படுத்துதல் மற்றும் தொழில் நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக 50,000 சமூகப் பணியாளர்களைத் தயார்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் 2 லட்சம் உறுப்பினர்களைச் சேர்ப்பதையும், 20 லட்சம் பெண்களிடையே நிலையான வேளாண்-சுற்றுச்சூழல் நடைமுறைகளை மேம்படுத்துவதையும் இப்பிரச்சாரம் இலக்காகக் கொண்டுள்ளது.

- டிஜிட்டல் வர்த்தகத்திற்கான திறந்தவெளி வலையமைப்பு (ONDC) மற்றும் அரசு மின்னணு-சந்தை (GeM) ஆகியவற்றில் 25,000 சுயஉதவிக் குழு உறுப்பினர்களை இணைக்க இது திட்டமிட்டுள்ளது. மேலும் தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் பணியாளர்கள் உத்யாம் சகிகள் என்று அங்கீகரிக்கப் படுவார்கள்.




## சர்வதேசச் செய்திகள்

### பிரிக்ஸ் STI கூட்டம் 2026



- 14வது பிரிக்ஸ் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகள் (STI) அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்திற்கு முன்னதாக, 16வது பிரிக்ஸ் STI மூத்த அதிகாரிகள் கூட்டம் (SOM) சென்னையில் நிறைவடைந்தது.
- 2026 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் பிரிக்ஸ் தலைமையின் கீழ் "Building for Resilience, Innovation, Cooperation and Sustainability" என்ற கருத்துருவில் இக்கூட்டம் நடைபெற்றது.
- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (DST) ஒருங்கிணைத்த இக்கூட்டத்தை சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT Madras) தொகுத்து வழங்கியது.
- பிரிக்ஸ் STI பணிக்குழுக்கள், முன்னுரிமைப் பகுதிகள், பிரிக்ஸ் STI கட்டமைப்புத் திட்டம் மற்றும் பிரிக்ஸ் இளம் அறிவியலாளர்கள் மன்றம், இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கான பரிசு போன்ற வரவிருக்கும் முயற்சிகள் குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது.

## முக்கியமான கனிமங்கள் குறித்த இந்தியா-ஜப்பான் ஒத்துழைப்பு

- முக்கியமான கனிம விநியோகச் சங்கிலிகள் மற்றும் மின்னணு-கழிவுகளை மறுசுழற்சி செய்வது தொடர்பான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இந்தியாவும் ஜப்பானும் புதுதில்லியில் விவாதித்தன.
- முக்கியமான கனிம விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்துவதற்கும், வரையறுக்கப் பட்ட முதன்மை வளங்களைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்கும் வளச் சுழற்சியை மேற்கொள்வதில் இந்தப் பேச்சுவார்த்தைகள் கவனம் செலுத்தின.
- தூக்கி எறியப்படும் மின்னணுப் பொருட்களிலிருந்து மதிப்பு மிக்க பொருட்களை மீட்டெடுக்க உதவும் மின்னணு-கழிவு மறுசுழற்சியை மேம்படுத்துவது குறித்தும் இரு தரப்பினரும் விவாதித்தனர்.
- இந்தியா-ஜப்பான் சுற்றுச்சூழல் ஒத்துழைப்பை ஆழப்படுத்தும் அதே வேளையில், நிலையான மற்றும் சுழற்சிப் பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதை இந்த ஒத்துழைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஆப்பிரிக்காவின் போலியோ மீதான கட்டுப்பாடு


- 2026 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரை நடத்தப்பட்ட மதிப்பீடுகளுக்குப் பிறகு புருண்டி, கானா, கினியா-பிசாவ், காங்கோ குடியரசு மற்றும் உகாண்டா ஆகிய நாடுகளில் வகை 2 போலியோ வைரஸ் பரவல் முடிவுக்கு வந்துள்ளதை உலக சுகாதார அமைப்பு (WHO) உறுதிப்படுத்தியுள்ளது.
- இந்த மதிப்பீடுகள் நோய் கண்காணிப்பு, ஆய்வக சான்றுகள், மக்களின் நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் தடுப்பூசி பிரச்சாரத்தின் செயல்திறன் ஆகியவற்றை ஆய்வு செய்தன.
- இந்த ஐந்து நாடுகளும் வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக வழக்கமான தடுப்பூசி செலுத்துதல், நோயைக் கண்டறிதல், கண்காணிப்பு மற்றும் இலக்கு வைக்கப்பட்ட நோய்த்தடுப்பு ஆகியவற்றை வலுப்படுத்தின.
- கினியா-பிசாவில் 2021 ஆம் ஆண்டு ஜூலை முதல் எந்தவொரு போலியோ வைரஸ்

பாதிப்பும் பதிவாகவில்லை. அதேவேளையில் காங்கோ குடியரசு தனது கடைசி பாதிப்பை 2023 ஆம் ஆண்டு டிசம்பரில் பதிவு செய்தது.

- அதிக தொற்றுத்தன்மை கொண்ட ஒரு வைரஸான போலியோ வைரஸ் முக்கியமாக நரம்பு மண்டலத்தைப் பாதிக்கிறது மற்றும் குணப்படுத்த முடியாத பக்கவாதத்தை ஏற்படுத்தும், எனினும், தடுப்பூசி மூலம் போலியோவைத் தடுக்க முடியும்.




## ஜிசாட்-1A திட்டம் – இஸ்ரோ





- சமீபத்தில் ஏவுதல்கள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஜிசாட்-1A (புவிசார் படமெடுக்கும் செயற்கைக்கோள்-1A) செயற்கைக் கோளை ஏவ இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.
- கடந்த 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மேற்கொள்ளப்பட்ட GSLV-F10 (புவி-ஒத்திசைவு செயற்கைக் கோள் ஏவு வாகனம்-F10) திட்டத்தின் போது இழக்கப்பட்ட EOS-03 (புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்-03) எனப்படும் ஜிசாட்-1 செயற்கைக்கோளுக்கு மாற்றாக ஜிசாட்-1A செயல்படும்.
- வால்வு கசிவு காரணமாக திரவ-ஹைட்ரஜனின் அழுத்தம் குறைந்ததால், கிரையோ

ஜெனிக் மேல் நிலை இயங்காமல் போனதன் காரணமாக 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட அத்திட்டம் தோல்வியடைந்தது.

- ஜிசாட்-1A செயற்கைக்கோள் GSLV Mk-II (புவி-ஒத்திசைவு செயற்கைக்கோள் ஏவு வாகனம் மார்க்-II) மூலம் ஏவப்பட உள்ளது. மேலும் இது வெள்ளம், புயல், விவசாயம் மற்றும் காடுகளைக் கண்காணிப்பதற்காக இந்தியாவின் பரந்த அளவிலான பகுதிகளைக் கண்காணித்து தகவல்களை வழங்கும்.
- ஏவுகலக் கருவியின் நம்பகத்தன்மை, சுற்றுப்பாதையில் நிலைநிறுத்துதல் மற்றும் புகைப்படம் எடுக்கும் செயல்திறன் ஆகியவற்றை இத்திட்டம் சோதிப்பதுடன் NavIC (இந்திய விண்மீன் தொகுதியைக் கொண்டு வழிச்செலுத்துதல்) அமைப்புக்காக திட்டமிடப்பட்டுள்ள NVS-03 (வழிச்செலுத்தல் செயற்கைக்கோள்-03) திட்டத்திற்கு முன்னதாக இது ஒரு முக்கியமான திட்டமாகப் பார்க்கப்படுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆப்பிரிக்காவின் அதீத வெப்ப நெருக்கடி




- ஓர் ஆய்வில், ஆப்பிரிக்காவின் முறைசாரா குடியிருப்புகளில் நிலவும் அதீத வெப்பம் சுகாதார ஏற்றத்தாழ்வுகளை மோசமாக்குகிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது.
- இந்த முறையான மதிப்பாய்வானது 11 கல்வி தரவுத்தளங்களில் உள்ள 96,608 பதிவுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 2010 மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கு இடையில் வெளியிடப்பட்ட 21 ஆய்வுகளை ஆய்வு செய்தது.
- தென்னாப்பிரிக்கா, கென்யா, தான்சானியா, கேமரூன், எகிப்து, நைஜீரியா மற்றும் கானா ஆகிய நாடுகளை இந்த ஆய்வுகள் உள்ளடக்கியிருந்ததுடன் மோசமான வீடுகள், அதிக மக்கள் நெரிசல், வரையறுக்கப்பட்ட தண்ணீர் மற்றும் பலவீனமான உள்கட்டமைப்பு ஆகியவை வெப்ப பாதிப்பை அதிகரித்துள்ளன.
- நீரிழப்பு, வெப்பச் சோர்வு, வெப்பத் தாக்கம் (heatstroke), தலைவலி, தூக்கப் பிரச்சனைகள், சுவாச நோய்கள், மனநலப் பிரச்சனைகள் மற்றும் பிற நோய்கள்

ஆகியவை வெப்பம் தொடர்பான விளைவுகளில் அடங்கும்.

- பாதிக்கப்படக்கூடிய சமூகங்களில் அதீத வெப்பத்தின் தாக்கம் மற்றும் அடிப்படையான சமூக-பொருளாதார நிலைமைகள் ஆகிய இரண்டிற்கும் தீர்வு காணும் வகையிலான தழுவல் நடவடிக்கைகளின் தேவையை இந்த ஆய்வு எடுத்துக் காட்டுகிறது.

# மாநிலச் செய்திகள்

## கிளைபோசேட் தடை - இமாச்சலப் பிரதேசம்




- வனப் பகுதிகளில் கிளைபோசேட் (Glyphosate) கலந்த களைக்கொல்லிகளைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்க வேண்டும் என 44 சமூக மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகள், ஓய்வுபெற்ற வனத்துறை அதிகாரிகள் மற்றும் அறிவியலாளர்கள் இமாச்சலப் பிரதேச அரசை வலியுறுத்தியுள்ளனர்.
- சட்டவிரோதமான பட்டாணி மற்றும் சணல் சாகுபடிக்காக தாவரங்களை அழிப்பதற்கு கிளைபோசேட் பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது; அதிக உயரமுள்ள வனப் பகுதிகளில் இத்தகைய நடைமுறை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இத்தகைய சாகுபடியானது 1980 ஆம் ஆண்டின் வனச் (பாதுகாப்பு) சட்டம், 1927 ஆம் ஆண்டின் இந்திய வனச்சட்டம் மற்றும் 2002 ஆம் ஆண்டின் பல்லுயிர் பரவல் சட்டம் ஆகியவற்றை மீறுவதாக அக்குழுக்கள் தெரிவித்துள்ளன.
- களைக்கொல்லிப் பயன்பாடு பதிவாகியுள்ள பகுதிகளில் இரசாயன எச்சங்கள் உள்ளதா என்பதை அறிய மண், நீர், தாவரங்கள் மற்றும் பல்லுயிர் ஆகியவற்றின் அறிவியல் பூர்வமான பரிசோதனையை அவர்கள் கோரியுள்ளனர்.
- வனத்துறையானது இதுதொடர்பாக பூஜ்ஜிய சகிப்புத்தன்மை அணுகுமுறையைக் கையாண்டு வருவதுடன், இது வரை ஐந்து சிறிய வனப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பட்டாணி சாகுபடியை அழித்துள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★